11.02.2026.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

**OS. 9/2025**

**வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | ராபர்ட் கிளைவ் | | |
| **த/பெ** | சிவப்பிரகாசம் | **மதம்** | |
| **கிராமம்** | விழுப்புரம் நகரம் மாவட்ட ஆட்சியரகம் காமதேனு நகர் | **தொழில்** | |
| **தாலுக்கா** | விழுப்புரம் | **வயது** | 46 / 2026 |
| **மாவட்டம்** | விழுப்புரம் | **தேதி** | 11.02.2026. |

இன்று சாட்சி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி 1 ஆவேன். நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நான்சொன்ன விபரம் அடிப்படையில் நிரூபணவாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. நான் படித்துப்பார்த்தேன் விபரம் சரியாக உள்ளது. கையொப்பம் போட்டேன்.

1. 18. 02. 2019 ல் வாதியின் வருமானத்தை கொண்டு மனைவி என்ற உறவுமுறை காரணமாக பிரதிவாதியின் பெயரில் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் கணினி நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. தாவா சொத்துக்கள் ஆனது பிரதிவாதியின் பெயரில் உள்ளதற்கு அத்தாட்சியான பட்டா ஆவணம் (கணினியில் பதிவிறக்கம் செய்தது) வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. வாதி தாவா சொத்தை கிரையம் வாங்க அளித்த காசோலைக்குரிய சேப்பாக்கம் வங்கி கணக்குக்குரிய வங்கி காசோலை புத்தகத்தின் முகப்பு பக்க ஆவணம் அசல் வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. பாரத ஸ்டேட் வங்கியில் சொத்தை கிரையம் பெற ரூ. 15,00,000/- கடன் பெற்றதற்கும், தவணை கட்டுவதற்கான அத்தாட்சி ஆவணம் (கணினியில் பதிவிறக்கம் ) வா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. வழக்கு சொத்தை கிரையம் பெற வாதி தன் வருமானத்தில் இருந்து ரூ. 6,00,000/- பரிமாற்றம் செய்ததற்கு அத்தாட்சியான Statment ஆவணம் (கணினியில் பதிவிறக்கம் செய்தது.) வா.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. குற்ற வழக்கு 275/2024 க்கான முதல் தகவல் அறிக்கை ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. குற்ற வழக்கு 275/2024 தொடர்பான விபத்து பதிவேடு ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. குற்ற வழக்கு 275/2024 தொடர்பான இறுதி அறிக்கை ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. வாதிக்கு எதிராக நிலுவையில் உள்ள D.V.56/2024 என்ற வழக்கு தொடர்பாக வாதிக்கு அனுப்பிய அறிவிப்பு நகல் வா.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. பிரதிவாதி பெயரில் T.N/25-BH-6617 என்ற பதிவு எண் கொண்ட MURUTHI SUZUKI DZIRE Zdi+ என்ற காரை வாங்கியதற்கு அத்தாட்சியாக காரின் பதிவு ஆவணம் நகல் வா.சா.ஆ. 10 (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது.) ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. விழுப்புரம் குடும்ப நல நீதிமன்றத்தில் மனு எண். HMOP.No.55/2024 நெம்பராகியதற்கு அத்தாட்சியான மேற்படி மனு சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12. பிரதிவாதி எனக்கு எதிராக பல்வேறு புகார்கள் கொடுத்து கடலூருக்கு பணி மாற்றம் செய்ததற்கு அத்தாட்சியான ந.க.எண. 5578/2024/சி1 ஆவணம் அசல் வா.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13. வாதி பணி மாறுதல் தொடர்பாக ந.க.எண. 8728/2025/சி1 ஆவணம் அசல் வா.சா.ஆ. 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

**குறுக்கு விசாரணை கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**